**தலைப்பு 124 – சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 124 – சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 29 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

### மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 12,046.16 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 11,622.13 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 424.03 மில்லியன் அதாவது 3.52 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 11,790.73 | 11,383.25 | 407.48 | 3.46 |
| மூலதனம் | 255.43 | 238.88 | 16.55 | 6.48 |
| மொத்தம் | **12,046.16** | **11,622.13** | **424.03** | **3.52** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 15.00 | 14.58 | 6.00 | 8.43 | 48.00 | 35.72 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.03 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0129/000 | 0.49 |
| 6000/0000/00/0013/0086/000 | 0.01 |
| 6000/0000/00/0016/0078/000 | 3.51 |
| 6000/0000/00/0018/0121/000 | 0.02 |
| மொத்தம் | 4.03 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தல்

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச சார்பற்ற நடவடிக்கைகள் தொடர்பான தேசிய செயலகத்தை ஸ்தாபிப்பதற்காக 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அச் செயலகம் தொடர்பாக சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளலை பெற்றுக்கொள்வதற்காக தேவையான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கையில் குடும்ப கொள்கைக்காக வழிகாட்டி கோவையொன்றைத் தயாரித்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு 2012 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 2017 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களும் 08 மாத காலம் கடந்திருந்ததுடன், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 1,087,438 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறித்த வழிகாட்டிக் கோவையின் வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயலாற்றல்

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) நாடளாவிய ரீதியில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட நிதியுதவி பெற்றுக் கொள்ளும் முதியோர் தொடர்பான தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறைந்த வருமானம் பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்காக ரூபா 2,000 ஆன கொடுப்பனவொன்று வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 9,262.37 மில்லியன் நிதி ஏற்பாடு அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 9,059.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த

நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 202.76 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அத்தோடு அக்கொடுப்பனவுகளிலிருந்து மீண்டும் ரூபா 100 கழிக்கப்பட்டு பிரதேச செயலகத்தினால் முதியோர் செயலகத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அவ்வாறு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 427.70 மில்லியன் தொகை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. வருடாந்த மதிபீட்டின் ஊடாக குறைந்த வருமானம் பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்காக வழங்கப்படும் ரூபா 2,000 ஆன கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 100 கழித்து கொடுப்பனவுகளை வழங்குவதன் நோக்கம் நிறைவேற்றுவது தொடர்பில் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(இ) 09 மாவட்டங்களில் சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,000 வீதம் வாழ்வாதார உதவி கொடுப்பனவிற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 667.22 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 180.42 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது இனங்காணப்பட்டிருந்த 19,645 நோயாளிகளில் 15,453 நோயாளிகளுக்கு மாத்திரம் உதவி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காத்திருக்கும் பட்டியலில் உதவிகளை எதிர்பார்த்த 4,192 நோயாளிகள் காணப்பட்ட போதிலும் அது தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காத்திருக்கும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுநீரக நோயாளிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் 09 மாவட்டங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 607.38 மில்லியன் நிதியேற்பாடுகளில் ஆண்டின் இறுதியில் ரூபா 122.67 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நிதி ஏற்பாடுகளை இனங்கண்டு நலனாளிகளுக்கு வழங்குவதற்கு முறையாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு மாதாந்த நிதிஉதவி கொடுப்பனவு 2016 ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு 2016 சனவரி மாதத்தின் போது ரூபா 3.87 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், நிதியுதவி 05 மாதங்கள் தாமதித்து 2016 யூன் மாதத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மதியுரைப் பிரிவினால் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 1500 சஞ்சிகைகளையும் 30,000 துண்டுப் பிரசுரங்களையும் 20,000 சேவைநாடுனர்களை மதிப்பீடு செய்யும் மாதிரிப் படிவங்களையும் தயாரிப்பதற்காக ரூபா 2,300,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதில் 30,000 துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன், சேவைநாடுனர்களை மதிப்பீடு செய்யும் 462,500 மாதிரிப் படிவங்களையும் 180 பதாதைகளையும் 1,500 சஞ்சிகைகளையும் தயாரிப்பதற்காக ரூபா 2,010,000 செலவிடப்பட்டிருந்தன.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 49 | 33 | 16 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 471 | 307 | 164 |
| (iv) | ஆரம்ப நிலை | 83 | 71 | 12 |
| (v) | ஏனையவை (அமைய / தற்காலிக ஒப்பந்த அடிப்படை | 04 | 03 | 01 |
| | **மொத்தம்** | **612** | **417** | **195** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் காணப்பட்ட 195 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது. எவ்வாறாயினும் மொத்த வெற்றிடங்களில் 111 மதியுரை உத்தியோகத்தர் பதவிகளாக இருந்ததுடன், 147 பிரதேச செயலகங்களில் மதியுரை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த உத்தியோகத்தர்களை இணைக்கப்பட முடியாதிருந்தமையால் உரிய அநேகமான திட்டங்களை முறைப்படி செயற்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உரித்தான போதிலும், ஆரம்பத்திலிருந்தே ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் பெறுகை குழுவின் தேவைப்பாடுகளுக்கும் வலது குறைந்தோருக்காக உட்பிரவேசிக்கும் வசதிகளை வழங்கும் சகல கட்டிடங்கள், பொது இடங்கள், பொது சேவை இடங்கள் என்பன வலது குறைந்தோருக்காக உட்பிரவேசிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.